**நீதித்துறைநடுவர் நீதிமன்றம், எண். 1, சிதம்பரம்.**

**முன்னிலை: செல்வி.எம்.மாயாதேவி, பி.ஏ., எல்எல்.பி.,**

**நீதித்துறைநடுவர் எண்.1, சிதம்பரம்.**

**2026-ம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் புதன்கிழமை**

**சுருக்கு வழக்கு எண். 53/2018**

**CNR.No.TNCD12-000194-2018**

**தமிழ்நாடு அரசுக்காக:**

காவல் உதவி ஆய்வாளர்,

கிள்ளை காவல் நிலையம்,

குற்ற எண். 216/2017 .... குற்றமுறையீட்டாளர்

-எதிர்-

1. பாஸ்கர் *(இறந்துவிட்டார்)*

த/பெ. ராஜேந்திரன்

2. விஜயசாரதி த/பெ. ராமமூர்த்தி .... எதிரிகள்

Order of the Hon'ble High Court of Madras in Roc.No.814/2020 /RG/F1 (P.Dis.No.36/2021) in Case Summary

| | | |
|---|---|---|
| 01. | The Period of remand of the accused | A1 & A2 – 26.08.2017 to 31.08.2017 |
| 02. | The date of filing of the Complaint/Final Report of the Court | 02.04.2018 |
| 03. | The date of committal of the case to the Court Session | Not Applicable |
| 04. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the | 10.09.2018 |

| | | |
|---|---|---|
| | case may be | |
| 05. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under Section 355 of the Code. | 1) Petition to recall PW1 U/s. 311 Cr.P.C. in CMP.No.464/2026 allowed on 20.05.2026.<br><br>2) Compromise Petition U/s. 359 BNSS in CMP.No.499/2026 dismissed on 27.05.2026.<br><br>3) To examine additional witness U/s. 348 BNSS in CMP.No.501/2026 allowed on 27.05.2026. |
| 06. | Date of examination in-chief and cross-examination of a witness. | PW1 to PW3 – 09.04.2019 (Chief & Cross)<br>PW4 – 07.09.2022 (Chief & Cross)<br>PW5 – 14.09.2022 (Chief & Cross)<br>PW6 - 04.01.2023 (Chief & Cross)<br>PW1 – 27.05.2026 (Cross)<br>PW7 – 27.05.2026 (Chief & Cross) |
| 07. | Date of examination of the accused under section 351 of the code; | 27.05.2026 |
| 08. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | Nil |
| 09. | grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கானது 10.04.2018-ந் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டும் அரசுத்தரப்பில் திருமதி.எம்.தேவசுந்தரி, அரசு உதவி வழக்கறிஞர் நிலை எண்.1 அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிரி தரப்பில் திரு.என்.மகேந்திரன், வழக்குரைஞர் அவர்கள் ஆஜராகியும் நடத்திட, இறுதியாக இருதரப்பு வாதங்களையும் இன்று கேட்கப்பட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் இன்று ஆராய்ந்து வழங்கும்,

## தீர்ப்புரை

1) கடந்த 25.08.2017-ந் தேதி இரவு 09.00 மணிக்கு கீழ் அனுவம்பட்டிலிருந்து விநாயகர் சிலை ஊர்வலம் வந்ததை வேடிக்கை பார்க்கவும் சாமி கும்பிடவும் கிள்ளை இரயிலடி மல்லிகா என்பவர் வீட்டின் எதிரில் சாட்சி-1 நின்று கொண்டிருந்தபோது 1 மற்றும் 2 எதிரியானவர்கள் அந்த வழியாக வந்த இரண்டு பேர்களிடம் தகராறு செய்து கொண்டு இருந்ததை ஏன் தகராறு செய்கிறீர்கள் என சாட்சி-1 கேட்டபோது எதிரிகள் இருவரும் சாட்சி-1 ஐ குச்சிகாரி தேவடியா மகன்களே நீ யார் கேட்பது என அசிங்கமாக திட்டி கையாலும் காலாலும் அடித்து உதைத்தும் எங்களிடம் வைத்துக்கொண்டால் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டல் விடுத்தும் சென்றுள்ளனர். எனவே, 1 மற்றும் 2 எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)-ன் படியாக, குற்றஞ்சாட்டி கிள்ளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) 1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றம் முன்னிலையானதும், எதிரிகளுக்கு கு.வி.மு.ச 207-ன் கீழாக வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டுள்ளது.

3) 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் 1 மற்றும் 2 எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)-ன் படியாக, குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது. இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது 1 வது எதிரி இறந்துவிட்டதாக இறப்புச்சான்று அரசுத்தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, 1 வது எதிரியின் மீதான குற்றச்சாட்டு அற்றுவிட்டது.

4) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2 வது எதிரியும் பாதிக்கப்பட்ட சாட்சியும் ஊர் பஞ்சாயத்தில் சேர்ந்து சமரசமாகிவிட்டதாக குறிப்பிட்டு இருதரப்பும் சேர்ந்து கையொப்பமிட்ட BNSS பிரிவு 359-ன் கீழான சமரசமனுவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் கண்டுள்ள

குற்றங்களானது சமரசத்திற்குரியதல்ல என்பதால் அம்மனு இந்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

5) அரசுத்தரப்பு சாட்சிகள் பட்டியலில் 1 முதல் 9 வரையிலானவர்களின் பெயர்கள் காண்பிக்கப்பட்டும், கூடுதல் சாட்சியாக பாபு காவல் ஆய்வாளர் என்பவர் சேர்க்கப்பட்டும், சாட்சி.6 விஜயஆனந்த், சாட்சி.8 ரங்கநாதன்(உதவி ஆய்வாளர்), சாட்சி.9 இளையராஜா(உதவி ஆய்வாளர்) ஆகிய மூன்று சாட்சிகளையும், அரசுத்தரப்பில் விலக்கி கொள்வதாக அரசுத்தரப்பு உதவி வழக்கறிஞர் சாட்சிகள் பட்டியலில் மேற்குறிப்பு செய்ததின் பேரில் விலக்கி கொள்ளப்பட்டும், எஞ்சிய சாட்சிகள் முறையே அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளன.

**6) அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரிய வரும் அரசுத்தரப்பு சாட்சியச் சுருக்கம்:**

(அ) அ.சா.1 ராஜாராமன் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். 2017-ஆம் வருடம் விநாயக சதுர்த்தி அன்று ஊர்வலம் வந்தததாகவும், அதை வேடிக்கை பார்க்க போனதாகவும், தில்லைவிடங்கனிலிருந்து இரண்டு நபர்கள் வந்ததாகவும், அந்த நபர்களை எதிரிகள் ஓரமாக போகச் சொல்லி ஏசினார்கள் என்றும், தான் ஏன் ஏசுகிறீர்கள் என்று கேட்டபோது தகாத வார்த்தைகளால் ஏசி தன்னை 5 நபர்களும் ஒன்றாக சேர்ந்துக்கொண்டு கையால் அடித்தும் காலால் உதைத்தும் தாக்கியதாகவும், தன்னால் எழுந்திருக்க முடியவில்லை என்றும், தன் மனைவி தன்னை சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றதாகவும், போலிசார் வந்து மருத்துவமனையில் விசாரித்தபோது நடந்ததை சொன்னதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் கூறியுள்ளார்.

(ஆ) அ.சா.6 ரவிசந்திரன் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் கடந்த 26.08.2017 அன்று மதியம் 12.00 மணிக்கு கிள்ளை காவல் நிலையத்தில் தலைமை காவலராக நிலைய பொறுப்பிலிருந்தபோது சிதம்பரம் அரசு

மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜகோபால் என்பவரிடம் அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவுசெய்து 01.30 மணிக்கு நிலையம் வந்து கிள்ளை காவல் நிலைய குற்ற எண்.216/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)-ன் படி அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் கூறியுள்ளார்.

(இ) அ.சா.7 காவல் ஆய்வாளர் பாபு இவ்வழக்கின் விசாரணை அதிகாரிக்கு மாற்றாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் வழக்கு கோப்பு உதவி ஆய்வாளர் ரங்கநாதன் பார்வைக்கு வைக்கப்பட்டதாகவும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சீனிவாசன், திலீப் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.6 பார்வை மகசர் தயார் செய்துள்ளதாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாகவும், 26.08.2017-ந் தேதி அன்று 1 மற்றும் 2 எதிரிகளை கீழ் அனுபவம்பட்டு சாலக்கரை மாரியம்மன் கோவில் திடல் அருகே தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து பிறகு தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், உதவி ஆய்வாளர் ரங்கநாதன் பணிமாறுதல் பெற்றதால் வழக்கு கோப்பு உதவி ஆய்வாளர் இளையராஜா வசம் ஒப்படைக்கப்பட்டதாகவும்,, காயம் அடைந்த அ.சா.1 ராஜாராமனுக்கு சிசிக்சை அளித்த அரசு காமராஜ் மருத்துவமனை மருத்துவர் விஜயஆனந்த் என்பவரை விசாரித்து அவரிடம் அ.சா.ஆ.7 காயச்சான்று பெற்று அவரது வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு விசாரணையை முடித்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்த காரணத்தினால் எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

7) அரசுத்தரப்பு சாட்சியத்தில் 2 வது எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து குவிமுச பிரிவு 351(1)(ஆ)-படியாக எதிரியிடம் வினவிய போது எதிரி அதனை மறுத்துள்ளார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும்

விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8) **தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில், இவ்வழக்கில் 2வது எதிரியின்மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)-ன்படியாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரை ஆகியவற்றின் மூலமும் எந்தவிதமான ஐயங்களுக்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டனவா? என்பதேயாகும்.

9) இவ்வழக்கில் கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் அரசுத்தரப்புக்கு ஆதரவாக 2வது எதிரி மீதான எந்தவொரு குற்றச்சாட்டினையும் மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் அ.சா.6 சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் அ.சா.7 காவல் ஆய்வாளர் மூலம் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்து சான்றாவணங்கள் குறியீடு செய்து உள்ளதால் 2வது எதிரி மீதான குற்றங்கள் அரசுத்தரப்பில் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் 2வது எதிரிக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டுமாய் வாதிட்டார்.

10) கற்றறிந்த எதிரிதரப்பு வழக்குரைஞர் அரசுத்தரப்பு வாதத்தினை மறுத்தும் இவ்வழக்கில் சம்பவம் குறித்தும் புகார் அளித்தது குறித்தும் சாட்சியம் அளிக்கவேண்டிய அ.சா.1 முதல் விசாரணையிலிருந்து முரண்பட்டு குறுக்கு விசாரணையில் பிறழ் சாட்சியாகியுள்ளதாலும், அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் பிறழ் சாட்சியாகியுள்ளதாலும், அ.சா.6 சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் அ.சா.7 காவல் ஆய்வாளரின் சாட்சியம் சான்றாவணங்களை உறுதி செய்யும் வகையில் எந்தவிதத்திலும் எந்த சாட்சியமும் அமையாததால் எழும் ஐயத்தின் பலனை 2வது எதிரிக்கே அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

11) **பிரச்சனைக்குரிய தீர்வு**

இரு தரப்பு வாதங்களும் சான்றாவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

புகார்தாரரான அ.சா.1 ராஜாராமன் தனது சாட்சியத்தில், 2017-ஆம் வருடம் விநாயக சதுர்த்தி அன்று ஊர்வலம் வந்ததாகவும், அதை வேடிக்கை பார்க்க போனதாகவும், தில்லைவிடங்கனிலிருந்து இரண்டு நபர்கள் வந்ததாகவும், அந்த நபர்களை எதிரிகள் ஓரமாக போகச் சொல்லி ஏசினார்கள் என்றும், தான் ஏன் ஏசுகிறீர்கள் என்று கேட்டபோது தகாத வார்த்தைகளால் ஏசி தன்னை 5 நபர்களும் ஒன்றாக சேர்ந்துக்கொண்டு கையால் அடித்தும் காலால் உதைத்தும் தாக்கியதாகவும், தன்னால் எழுந்திருக்க முடியவில்லை என்றும், தன் மனைவி தன்னை சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றதாகவும், போலிசார் வந்து மருத்துவமனையில் விசாரித்தபோது நடந்ததை சொன்னதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், *" சம்பவம் நடந்த போது இரவு 9 மணி இருக்கும் என்றால் சரிதான். அது திருவிழா சமயம் என்பதால் 50 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு கும்பலாக என்னை தாக்கியதால் யார் என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். யார் என்னை திட்டினார்கள் என்றும். கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்தின் முதல் விசாரணையில் போலீஸார் சொல்லிக் கொடுத்து சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்"* என்று கூறியுள்ளார். இவ்வாறு அ.சா.1-ன் சாட்சியம் முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் முரண்பட்டு இருப்பதால் நம்பகத்தன்மை அற்று இருப்பதாக கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது.

13) 2 வது எதிரி ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவோ, கையால் அடித்ததாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ எந்தவொரு சாட்சியமும் 2 வது எதிரி மீது குறிப்பிட்டு அ.சா.1 கூறவில்லை என்பதால் அ.சா.1-ன் சாட்சியத்தை அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. எனவே, 2 வது எதிரியின்

மீதான எந்தவொரு குற்றச்சாட்டும் நிரூபணம் செய்யும் வகையில் அ.சா.1-ன் சாட்சியம் அமையவில்லை என்றே முடிவு காணப்படுகிறது.

14) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 மல்லிகா தனது சாட்சியத்தில், சுமார் 1 வருடத்திற்கு முன்பு விநாயகசதுர்த்தி அன்று தான் வீட்டு வாசலில் தீபார்த்தனை பெற்றுக்கொண்டு உள்ளே சென்றுவிட்டதாகவும், சம்பவம் நடந்தது பற்றி தனக்கு தெரியாது என்று சொன்னதாகவும், போலிசார் தன்னை 3 நாட்கள் கழித்து விசாரித்தபோது சம்பவத்தை பற்றி தனக்கு தெரியாது என்று தான் சொன்னேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.2-ன் சாட்சியத்தினையும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

15) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3 பரமேஷ்வரி தனது சாட்சியத்தில், சுமார் 2 வருடத்திற்கு முன்பு விநாயகசதுர்த்தி அன்று ஊர்வலத்தில் இரவு 11 மணியிருக்கும் தான் தன் வீட்டு வாசலில் படையல் போட்டதாகவும், தீபார்த்தனை பெற்றுக்கொண்டு உள்ளே சென்றுவிட்டதாகவும், சம்பவம் நடந்தது பற்றி தனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும், கோவில் விசேஷத்தில் அடிபுடி தகராறு என்று தான் கேள்விப்பட்டதாகவும், யார் யாருக்கு தகராறு என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.3-ன் சாட்சியத்தினையும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

16) பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 மகாலிங்கம் தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள இரண்டு சாட்சி கையொப்பங்களில் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையதுதான் என்றும், 2 – 3 வருடங்களுக்கு முன்பு கிள்ளை காவல் நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்ததாகவும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.4-ன் சாட்சியத்தினையும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

17) மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.5 ஜெயராமன் தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள இரண்டு சாட்சி கையொப்பங்களில் தன்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், போலிசார் வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.5-ன் சாட்சியத்தினையும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

18) அ.சா.7 காவல் ஆய்வாளர் பாபு இவ்வழக்கில் புலன்விசாரணை மேற்கொண்ட புலன்விசாரணை அதிகாரிக்கு மாற்றாக சாட்சியம் அளித்துள்ளார். இந்நீதிமன்றத்தில் அ.சா.7 காவல் ஆய்வாளர் பாபு அளித்த சாட்சியத்தில் தற்போது கிள்ளை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைகாவலர் ரவிச்சந்திரன் மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் இளையராஜா பணி மாறுதல் பெற்று வேறு பணியிடம் சென்றுவிட்ட நிலையில் மேற்படி தலைமை காவலர் மற்றும் உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு தெரியும் என்ற வகையிலும் வழக்கு கோப்பின் அடிப்படையில் அவர்களுக்கு மாற்றாக சாட்சியம் அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

19) அ.சா.7 காவல் ஆய்வாளர் பாபு என்பவரின் நீதிமன்ற சாட்சியத்தைப் பரிசீலனை செய்கையில், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. தனிநபர் சாட்சிகள் அரசுத்தரப்பிற்கு வலுசேர்க்காத நிலையில் புலன்விசாரணை அலுவலருக்கு மாற்றாக சாட்சியம் அளித்த அ.சா.7-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு 2 வது எதிரி குற்றம் புரிந்தார் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20) மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பார்க்கும்போது, 2 வது எதிரி ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவோ, கையால் அடித்ததாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்களின் சாட்சியம் அரசுத்தரப்பு

வழக்கை வலுசேர்க்கும் வகையில் அமையாததால் அ.சா.7 விசாரணை அதிகாரியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் இவ்வழக்கு 2 வது எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

21) முடிவாக, இவ்வழக்கில் 2 வது எதிரியானவர் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)-ன்படியாக, குற்றவாளி இல்லையென தீர்வு கண்டதால் 2 வது எதிரியை BNSS பிரிவு 278(1)-ன் கீழாக விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 வது எதிரி இறந்துவிட்டதாக அரசுத்தரப்பில் இறப்புச்சான்று சமர்ப்பிக்கப்பட்டதால் 1 வது எதிரியின் மீதான குற்றச்சாட்டு அற்றுவிட்டது. (2 வது எதிரி மீதான பிணை முறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது).

22) இவ்வழக்கில் உத்திரவிடுவதற்கான வழக்கு சொத்து எதுவுமில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பார்த்து, பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAYADEVI M — Digitally signed by MAYADEVI M Date: 2026.05.27 18:32:33 +0530

நீதித்துறைநடுவர் எண்.1,

சிதம்பரம்.

**1) அரசுத்தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ராஜாராமன். |
| அ.சா.2 | திருமதி.மல்லிகா. |
| அ.சா.3 | திருமதி.பரமேஷ்வரி. |
| அ.சா.4 | திரு.மகாலிங்கம். |
| அ.சா.5 | திரு.ஜெயராமன். |
| அ.சா.6 | திரு.ரவிச்சந்திரன்(தலைமை காவலர்). |

அ.சா.7 திரு.பாபு(காவல் ஆய்வாளர்).

**2) அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:.**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1 | 26.08.2017 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1-ன் கையொப்பம். |
| அ.சா.ஆ 2 | 26.08.2017 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4-ன் 1வது சாட்சி கையொப்பம். |
| அ.சா.ஆ 3 | 26.08.2017 | புகார் வாக்குமூலம். |
| அ.சா.ஆ 4 | 26.08.2017 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ 5 | 26.08.2017 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ 6 | 26.08.2017 | பார்வை மகசர். |
| அ.சா.ஆ 7 | 25.08.2017 | அ.சா.1-ன் காயச்சான்று. |

**3) அரசுத்தரப்பு சான்றுப்பொருள்.** இல்லை

**4) எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்று பொருள்.** இல்லை.

MAYADEVI M Digitally signed by MAYADEVI M Date: 2026.05.27 18:32:39 +0530

நீதித்துறைநடுவர் எண்.1,

சிதம்பரம்.

**குறிப்பு:**

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:**

மாண்பமை கடலூர் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.